# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2164/70 - 2020 පෙබරවාරි මස 28 වැනි සිකුරාදා - 2020.02.28

*2164/70 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. வ. பி. 1/2005.*

**2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டம்**

*2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தின் 6, 9, 17, 18 மற்றும் 25 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 204 ஆம் பிரிவின்கீழ் உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

கலாநிதி பந்துல குணவர்த்தன,
உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்.

கொழும்பு,
*2020, பெப்புருவரி 28.*

ஒழுங்குவிதிகள்

*2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதிய 2128/6 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, புலமைச் சொத்து ஒழுங்குவிதிகள் (பாடல்கள் மற்றும் இசை ஆக்கம்), "உடன்படிக்கையொன்றைச் செய்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் ஒழுங்குவிதி 2(1) இல் இத்தாற்றிருத்தப்படுகின்றன :-*




*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

"உடன்படிக்கையொன்றைச் செய்தல் வேண்டும் :

ஆயின், தன்னுணர்ச்சிப் பா பாடகர், இசைப் பாடகர் அல்லது பாடகர் ஒருவருக்கு அரசுரிமைப் பணமாகச் செலுத்தப்பட வேண்டிய குறைந்தபட்சக் கொடுப்பனவு பின்வருமாறாதல் வேண்டும் :-

(அ) ஒரு பாடலை அல்லது இசை ஆக்கத்தை அல்லது பாடல் வரிகளை அல்லது அதன் ஏதேனும் கணிசமான பகுதியை வானொலியில் ஒரு தடவை ஒலிபரப்புதல் தொடர்பில், இருபது (20/-) ரூபாவான பணத்தொகையொன்று ; அத்துடன்

(ஆ) ஒரு பாடலை அல்லது இசை ஆக்கத்தை அல்லது பாடல் வரிகளை அல்லது அதன் ஏதேனும் கணிசமான பகுதியை தொலைக்காட்சியில் ஒரு தடவை ஒளிபரப்புதல் தொடர்பில், நூறு (100/-) ரூபாவான பணத்தொகையொன்று.".

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.